# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




வியாழக்கிழமை 07.10.2021 supeedsam.com supeedsam@gmail.com

## புதிதாக சம்பள உயர்வைக் கோரவில்லை

### வாக்குறுதி அளித்ததுபோல் தீர்த்து வைக்குமாறு கோருகின்றோம்



(எஸ். சதீஸ்)

எமது சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டம் மக்கள் மத்தியில் ஒரு சிலரால் தவரான முறையில் கொண்டு செல்லப்படுகின்றது. இதனை மாணவர்களின் பெற்றோர்கள் புரிந்துகொள்ள வேண்டும், நாம் புதிதாக சம்பள உயர்வைக் கோரவில்லை. அரசாங்கள் வாக்குறுதி அளித்ததுபோல் சம்பள முரண்பாட்டினை

02 ஆம் பக்கத்தில்...



## திரு குர்ஆனை தடை செய்யுங்கள்

மனிதர்களை திரு குர்ஆன் கொல்ல சொல்லுமாக இருந்தால் அதை தடை செய்யுங்கள் என தேவால்ஹிந்த அஜித தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஞானசார தேரர் கூறியது உண்மை என்றும், அவர் கூறியதை போன்று நாட்டில் மீண்டும் ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல் இடம்பெறலாம் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

இதற்கு காரணம் திரு குர்ஆன் என்றும், அல்லாஹ்வை வழிபட்டு அதை போதிக்கும் முஸ்லிம் மக்களுமே எனவும் அவர் கூறியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## 35 ஆண்டு ஒப்பந்தப்படி சகல எண்ணெய் குதங்களும் இந்தியாவசம்



(காந்தன்)

இலங்கை இந்தியாவிற்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள திருகோணமலை எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய உடன்படிக்கையானது அடுத்த 35 ஆண்டுகளுக்கு, ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சபையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## 30 ஆயிரம் பேர் நீரில் மூழ்கும் அபாயம்

### கிராண் புல் அணைக்கட்டுப் பகுதி மக்கள் அச்சம்

மட்டக்களப்பு கிராண் புல் அணைக்கட்டுப் பகுதியில் கடந்த 2015ஆம் ஆண்டு மண் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் மீண்டும், 15 புதிய மண் அகழ்வு உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை 15 புதிய மண் உரிமம் வழங்குவதற்கு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மண் தரகர்களுடன் செங்கலடி பிரதேச செயலாளர், புவிசரிதவியல் திணைக்கள அதிகாரி, வன இலாக்க அதிகாரிகள் வருகை தந்து இருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## அனுராதபுரம் கைதிகளை யாழுக்கு மாற்றவேண்டும்

### சாணக்கியன் வேண்டுகோள்



(காந்தன், ராஜ்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக எப்போதும் குரல் கொடுக்கும் என்றும் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய போதே சாணக்கியன் எம்.பி.இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மாகாண பயணத்தடையை மீறி சட்டவிரோதமாக பயணித்த பஸ்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு

(பாறுக் ஷிஹான்)

பயணத்தடையை மீறி மாகாணங்களுக்கு இடையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு பஸ் வண்டிகள் இரண்டு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## யுத்தத்தை நிறைவு செய்வதே மகிந்த ராஜபக்ஸவின் அன்றைய எதிர்பார்ப்பாக இருந்தது



(யாழ்.கீதன்)

எவரையும் தோற்கடிப்பது அன்றி யுத்தத்தை நிறைவு செய்வதே பிரதமர் மகிந்த ராஜபக்ஸவின் அன்றைய எதிர்பார்ப்பாக காணப்பட்டது என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார தெரிவித்தார்.

நயினாதீவில் இடம்பெற்ற தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப் பணிகள் மற்றும் யாழ். நகர நீர் வழங்கலுக்கான நீர் குழாய் அமைக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து

02 ஆம் பக்கத்தில்...

## வந்தான் வரத்தான்கள் முஸ்லிம்களை வழிநடத்த அனுமதிக்க முடியாது

### பாராளுமன்றத்தில் கோதித்தெழுந்தார் ஹரீஸ் !



(நமதுநிருபர்)

நாங்கள் அரசுக்கு சார்பான எம்.பிக்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற போதிலும் இந்த உயரிய சபையில் உறுப்பினர்களாக சிரேஷ்ட அரசியல்வாதிகளான இம்தியாஸ் பாக்கீர்

09 ஆம் பக்கத்தில்...




## ஒற்றையாட்சிக்குள் வருகின்ற அரசியலமைப்பை அரசாங்கம் நிராகரிக்க வேண்டும்

### கஜேந்திரகுமார் வலியுறுத்தல்



(ஊர்காவலன்)

ஒற்றையாட்சிக்குள் வருகின்ற அரசியலமைப்பை சிறிலங்கா அரசாங்கம் நிராகரிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை பேச்சுவார்த்தைக்கு

02 ஆம் பக்கத்தில்...

### கோட்டும் மழையையும் பொருட்படுத்தாது

## கோழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய மன்னார் மடு கோவில்மோட்டை விவசாயிகள்



(ஊர்காவலன்)

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் மன்னார் மடு கோவில்மோட்டை விவசாயிகளினால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...






## ஒற்றையாட்சிக்குள் வருகின்ற அரசியலமைப்பை

வருமாறு சிறிலங்கா அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ள நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடைய அரசாங்கம் தன்னிச்சையாக அரசியலமைப்பை நிறைவேற்ற முற்படுவதாக இதன்போது அவர் கடுமையாக சாடியுள்ளார்.

## யுத்தத்தை நிறைவு செய்வதே மகிந்த

வைக்கும் நிகழ்வில், அலரி மாளிகையில் இருந்து காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட போதே இதை தெரிவித்தார்.

எவரையும் தோற்கடிப்பது அன்றி யுத்தத்தை நிறைவு செய்வதே பிரதமர் மகிந்த ராஜபக்ஸவின் அன்றைய எதிர்பார்ப்பாக காணப்பட்டது.

எவ்வளவு செலவானாலும் யுத்தத்தினால் இழந்த சொத்துக்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு பிரதமர் எமக்கு தொடர்ந்து அறிவுறுத்தினார்.

அதிகம் செலவாகும் என அமைச்சரவையில் குறிப்பிட்ட போது எவ்வளவு செலவானாலும் இந்த நீர் வழங்கல் திட்டத்தை நாம் அமைக்க வேண்டும் என பிரதமர் கூறினார்.

இவை அனைத்தும் வடக்கு மக்களுக்காகவே ஆகும். இந்த பாய்ந்தோடும் நீருடன் பிரதமரின் இதயத்தின் கருணையும், நல்லிணக்கமும் பாய்ந்தோடுகிறது என அமைச்சர் கூறினார்.

## புதிதாக சம்பள உயர்வைக் கோரவில்லை

தீர்த்து வைக்குமாறு தான் கோருகின்றோம் என இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கத்தின் (GTSL) சிரேஷ்ட உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளருமான சிவகுமார் தெரிவித்தார்.

புதன்கிழமை ( 06)ஆசிரியர் தின கொண்டாட்டத்தை தேசிய கறுப்பு எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்தி ஆசிரியர் இல்லங்கள், பாடசாலைகளுக்கு முன்னால் கறுப்பு கொடி ஏற்றி ஆசிரியர்கள் எதிர்ப்பிளை தெரிவித்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே மேற்படி கருத்தினை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஏற்கெனவே சம்பள முரண்பாடு திட்டம் வரையப்பட்டு அதை நடைமுறைப்படுத்துவோம் என தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளிக்கப்பட்டது. இன்று அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து அத்த திட்டத்தை அமுல்படுத்தாது பாராமுகமாக இருக்கின்றது.

உலகெங்கும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நிலையில் இலங்கையில் ஆசிரியர்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது இந்த போராட்டத்தை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். நாம் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள் அல்ல, எமது இந்த போராட்டம் மக்கள் போராட்டமாக மாறவேண்டும்.

ஆகையால், அரசாங்கத்தினால் வாக்குறுதி அளித்தது போல் இந்த சுபோதினி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுதான் எமது பிரச்சனைக்கு ஒரே தீர்வு எள தெரிவித்தார்.

## அனுராதபுரம் கைதிகளை யாழுக்கு

அனுராதபுரத்தில் அச்சுறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை அண்மையில் நாங்கள் சந்தித்து பேசியிருந்தோம்.நாங்கள் அவர்களை சந்தித்து பேசும் போது,அமர்வதற்கு கதிரைகள் கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

எனினும் நாங்கள் வலியுறுத்தி அவர்கள் அமர்ந்து பேச கதிரைகளை பெற்றுக்கொடுத்தோம். அவர்களை நாங்கள் சந்தித்து பேசும் போது, சிறைச்சாலை ஊழியர்களும் அருகில் இருந்தமையினால் பல விடயங்களை பேச முடியவில்லை.

எனினும் அவர்கள் தங்களை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு எங்களிடம் தெரிவித்தனர்.

ஆனால், தன்னிடம் அப்படி அவர்கள் கூறவில்லை என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று அனுராதபுரம் சிறையில் நடைபெற்ற சம்பவத்திற்கு நீதி அமைச்சர் மன்னிப்பு கோரியமையினை நாங்கள் வரவேற்கின்றோம்.

அண்மையில் சில அரசியல் கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.முகப்புத்தகத்தில் பதிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.அதில் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி உறுப்பினர் சோபணன் என்பவரும் அடங்கியுள்ளார்.

இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியுள்ளது.இவர்கள் அனைவரின் விடுதலைக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் நாங்கள் தொடர்ந்தும் பாடுபடுவோம் என சாணக்கியன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

## 35 ஆண்டு ஒப்பந்தப்படி சகல எண்ணெய்

அதற்கு ஏற்ப சகல எண்ணெய் குதங்களும் இந்தியா வசமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில், திருகோணமலை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 2003 ஆம் ஆண்டு உடன்படிக்கைக்கு அமையச் சரித ரத்வத்தே திறைசேரி செயலாளராகவும், தகாம் விமலசேன பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவராகவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஆகவே 2003 ஆம் ஆண்டிலிருந்து 35 ஆண்டுகள் ஒப்பந்தம் என்றால் 2038 ஆம் ஆண்டு வரையில் நடைமுறையில் இருக்கும், ஆனால் இந்தியா என்பது மாலைதீவு போன்ற சிறிய நாடு அல்ல.

ஆகவே இந்தியாவிடம் இருந்து இவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வது சாதாரண விடயம் அல்ல. ஆகவே அவர்களிடம் இருந்து உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்ள பாரிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.




# உமிரியில் காடழிப்பா? அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

(வி.ரி.சகாதேவராஜா)

உமிரியில் காடழித்து நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை இடம்பெற்றுவருவதாக பொது மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனையிட்டு அதிகாரிகள் தலையிட்டு நீதி வழங்குவார்களா என மக்கள் கோருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள உமிரி கிராமபகுதியிலுள்ள கல்பாறைகளான மலைகளிலுள்ள காடுகளின் மரங்களை வெட்டி தீயிட்டு காடழிப்பு நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உமிரி கிராமத்தில் இருக்கும் இந்த கல் பாறைகளுடனான காட்டுபகுதி அரச காணிகள் ஆகும்.

களப்பு மற்றும் வட்டிகுளம் பகுதியை அண்மித்த பகுதிகளிலுள்ள கிராமங்களிலுள்ள இந்த காடுகளின் மரங்களை சிலர் வெட்டி அதனை தீயிட்டு அழித்து நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையினை சில வாரங்களாக மேற்கொண்டு வருகின்றனர் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது உமரி கடற்கரை பகுதியிலுள்ள சிலர் தமது சொந்த காணிகளை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்துவிட்டு ,தற்போது தாங்கள் குடிமனைகளை கட்டி சேனைப்பயிர் செய்கை செய்ய போவதாக, இதுவரை சுமார் 10 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த கல்பாறையுடைய காட்டில் எவ்வாறு பயிர் செய்யமுடியும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் ,பயிர் செய்ய போகின்றோம் என்ற பெயரில் சிலர் இந்த நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே இந்த காடழிப்புக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே இதன் பாதிப்பினை உணர்ந்து உடனடியாக இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பாராளுமன்றத்தில் வேன்ற சாப்பாடு

(காந்தன், ராஜ்)

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் பெற்றோலிய வளங்கள் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படவிருந்தது நிலையில் வெள்ளைப்பூண்டு, லிற்றோ காஸ் தொடர்பில் அரச,

எதிர்க்கட்சியினரிடையில் நீண்ட நேரமாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் எதிர்க்கட்சி தெரிவித்த குற்றச்சாட்டுக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நீண்ட விளக்கம் ஒன்றை வழங்கிக் கொண்டிருந்தார். ஆனால் முக்கியமான விவாதம் இருப்பதாகவும் அமைச்சர் நேரத்தை வீணடிப்பதாகவும் கூறி இதற்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனால்,அரசு தரப்பினர் அமைச்சருக்கு விளக்கமளிக்கும் உரிமை உள்ளதென வாதிட்டு அமைச்சரை விளக்கமளிக்க அனுமதிக்குமாறு சபாநாயகரை கோரினர்.

அப்படியானால் அமைச்சர் நீண்ட நேரம் விளக்கமளிப்பதனால் 12.30 மணியிலிருந்து 1.30 மணிவரையிலான உணவுக்கான நேரத்தையும் விவாதத்திற்கு எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கோரினர். ஆனால் அவ்வாறான கோரிக்கை அரச தரப்பிடமிருந்தே விடுக்கப்பட்ட வேண்டுமென சபாநாயகர் கூறினார்.


எனினும் உணவுக்கான நேரத்தை விவாதத்திற்கு எடுக்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். தாம் உணவருந்த நேரம் வேண்டும் என்றார். அப்போது எழுந்த எதிர்க்கட்சி எம்.பி.யான நளின் பண்டார, நாம் நாடு முக்கியம் என்கின்றோம். அமைச்சர் சாப்பாடு முக்கியம் என்கின்றார். நாடா சாப்பாடா முக்கியம் என்பதனை சபாநாயகரின் முடிவில் பார்ப்போம் என்றார்.

இந்நிலையில் 11 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய பெற்றோலிய வளங்கள் தொடர்பான விவாதம் 12.15 மணியளவிலேயே ஆரம்பமானது. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரான உதய கம்மன் பில உரையாற்றிக்கொண்டிருந்த போது, 12.30 மணிக்கு உணவு நேரத்துக்காக சபை நடவடிக்கை 1.30மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்து சபையை உணவுக்காக ஒத்திவைத்தார்.

ஆக நாடா சாப்பாடா முக்கியம் என்ற எதிர்க்கட்சியின் கேள்விக்கு சாப்பாடுதான் முக்கியம் என்ற பதிலே சபை ஒத்திவைப்பின் மூலம் கிடைத்தது

## மாகாண பயணத்தடையை மீறி சட்டவிரோதமாக பயணித்த பஸ்கள்






அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை சம்மாந்துறை கல்முனை ஊடாக கொழும்பு நோக்கி சட்டவிரோதமாக இரு பஸ்கள் சென்று கொண்டிருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பெரியநீலாவணை இராணுவ காவலரனில் வைத்து புதன்கிழமை(6) இரவு 10 மணியளவில் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன் போது குறித்த இரு வேறு பஸ் வண்டிகளிலும் சுமார் 100க்கும் அதிகமான பயணிகள் இருந்ததுடன் அவ்விடத்திற்கு வருகை தந்த கல்முனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சாந்த விஜயகோன் சுகாதார தரப்பு அதிகாரிகளினால் பயணிகள் அனைவரும் அறிவுறுத்தபட்டு மீண்டும் குறித்த பஸ்களில் அழைத்து செல்லப்பட்டு கல்முனை பொலிஸ் நிலையத்தில் சிறுது நேரம் தடுத்து வைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த பஸ் வண்டிகளின் சாரதி நடத்துனர்களிடம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.இது தவிர அத்தியாவசிய தேவைக்காக மட்டுமே மாகாணங்களுக்கு இடையிலான பயணங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் மாகாணத்தில் உள்வரும், வெளியேறும் பல நுழைவாயில்களில் கடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தை தொடர அனுமதிக்கப்படுவதாகவும் அவ்வாறு கட்டுப் பாடுகளை மீறி பயணம் செய்பவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மாகாணங்களுக்கு இடையில் பயணத்தடை தொடர்ந்தும் அமுலில் உள்ள நிலையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறி அம்பாறை மாவட்டத்தில் இருந்து இரவு வேளைகளில் குளிருட்டப்பட்ட பல தனியார் பஸ்கள் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

## கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது கொழும்பில்

அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் கோவிட் என்று ஓடி ஒளியாமல் ஏழை விவசாயிகளின் பிரச்சனைக்குத் தீர்வு கொடு, ஆளுநரிடம் காணி பெறுவதற்கான அனுமதி கோராமல், காணி தங்களுடையது என கூறும் அராஜகத்தை மத குருக்கள் நிறுத்துங்கள், போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோவில் மோட்டை விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதனையடுத்து போராட்ட களத்திற்குச் சென்ற ஜனாதிபதியின் செயலாளரிடம் சட்டத்தின் பால் வடக்கு மாகாணம் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்த மத்திய அரசு இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கலாக எழுதப்பட்டிருந்த மகஜர் ஒன்றை ஜனாதிபதியின் செயலாளரிடம் விவசாயிகள் கையளித்துள்ளனர்.

## 30 ஆயிரம் பேர் நீரில் மூழ்கும் அபாயம்

இதன்போது அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக பார்வையிட வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்றுள்ளனர்.

கிராண் புல் அணைக்கட்டு தற்போது உடைந்து காணப்படுகின்ற போதிலும், அதற்கு ஒரு பாலம் போடுவதற்கு எவரும் முன்வராத நிலையில், மண் அகழ்வுக்கு 15 உரிமம் அனுமதி வழங்கியிள்ளமை விவசாயிகள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த இடத்தில் மண் அகழ்வு மேற்கொண்டால், சுற்றியுள்ள 30 ஆயிரம் குடும்பங்கள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளதாகவும், விவசாய நிலங்களும் முற்றாக நீரால் மூழ்கி பாதிப்பை ஏற்படுத்தும் என விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் மண் அகழ்வுக்கு பின்னால் அரசியல் தலையீடு உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தங்களது வியாபாரத்தில் அரச அதிகாரிகள் பிழையான செயற்பாடு மேற்கொண்டுள்ளதாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக மண் வியாபாரிகள் கூறுகின்றனர்.

புதிய 15 மண் உரிமம் தொடர்பாக பிரதேச செயலாளரும், புவி சரிதவியல் அதிகாரியும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுத்ததுடன் விவசாயிகளின் எதிர்ப்பால் திரும்பிச் சென்றுள்ளனர்.

## திரு குர்ஆனை தடை செய்யுங்கள்



எந்தவொரு மதத் தலைவரும் கொலைகாரர்கள் அல்ல என்பதை சரத் வீரசேகரவிற்கு நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். உலகளாவிய ரீதியில் கோடிக்கணக்கான முஸ்லிம்கள் உள்ளனர்.

அப்படியும் மனிதர்களை கொல்ல சொல்லும் மதங்கள் இலங்கையில் இருந்தால் அப்படியான மதங்கள் எமக்கு தேவையில்லை. மூன்றில் இரண்டு பலம் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு தைரியமில்லையா? ஜனாதிபதி, பிரதமருக்கு தைரியம் இல்லையா ? மனிதர்களை திருகுர்ஆன் கொல்ல சொல்லுமாக இருந்தால் அதை தடை செயுங்கள், அப்படி ஒரு பகுதி அதில் இருந்தால் அதை நீக்குங்கள்.

இந்த பிரச்சினைகளால் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கத்தோலிக்க, சிங்கள மக்கள் என அனைவரும் தினம் தினம் பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

வாக்குகளுக்காக கோட்டாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச பள்ளிவாசல்களுக்கு சென்றுள்ளார்கள். அங்கு சென்று வாக்கு பிச்சை எடுக்கின்றார்கள்.

மூன்றில் இரண்டு பலத்தை பெற முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பை பெறுகின்றார்கள். முஸ்லிம் மக்களை ஏசிக் கொண்டே உதய கம்மன்பில முஸ்லிம் நாடுகளுக்கு சென்று பிச்சை எடுக்கின்றார்.

தமிழ் மக்களை இனவாதி என்று சொல்கின்றார்கள் அப்படியென்றல் நிரூபமாவின் கணவர் நடேசன் யார்? அவர் ஒரு தமிழர்.

அப்படியென்றால் ஏன் இப்படியான பிரச்சினைகள் வர வேண்டும்? நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தி விட்டு வெளிநாடுகளில் சென்று ஏன் பிச்சை எடுக்கின்றீர்கள். யாரை ஏமாற்றுகின்றீர்கள்? என கேள்விக்கணைகளை தொடுத்துள்ளார்.

# நுவரெலியாவில் அதிபர்,ஆசிரியர்களின் கவனயீர்ப்பு போராட்டம்





**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா பிரதான தபாற் கந்தோருக்கு அருகில் ஆசிரியர்,அதிபர் தொழிற்சங்க கூட்டணியின் ஏற்பாட்டில் புதன்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குக் தீர்வு வழங்ககோரி நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று புதன்கிழமை நுவரெலியா பிரதான தபாற்கந்தோருக்கு முன்பாக ஆசிரியர் விடுதலை முன்னணி ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தங்களது உரிமைகளை கோரி இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் இலங்கை ஆசிரியர்சங்கம்,ஆசிரியர் விடுதலை முன்னணி , மலையக ஆசிரியர் முன்னணி உள்ளிட்ட அனைத்து தொழிற்ச்சங்க உறுப்பினர்களும் கலந்துக்கொண்டனர். நாடளாவிய ரீதியில் அதிபர்,ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்களும் கல்விசாரா ஊழியர்களும் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு கடந்த 24 வருடங்களாக கோரி வருகின்றனர். ஆனால் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக்கொண்டும் அரசு தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை.

ஆகவே எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரியே ஆசிரியர் தினத்தில் இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். இது அரசுக்கோ, அரசியல்வாதிகளுக்கோ எதிரான போராட்டம் அல்ல. அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்திற்கு நியாயமான தீர்வை வழங்க கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டத்தில் கலந்துக்கொண்ட அதிபர்,ஆசிரியர்கள் கருத்து தெரிவித்தனர். கொவிட் 19 கொரோனா தொற்றின் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போத்துவிலில் ஆர்ப்பாட்டம்



**திருக்கோவில் நிருபர்**

அம்பாரை பொத்துவில் கோட்டக்கல்வி பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர் ஆசிரியரிகள் உலக ஆசிரியர் தினத்தை கரிநாளாக அடையாளப்படத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுத்து இருந்தன.

இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது பொத்துவில் கோட்டக்கல்வி அலுவலத்திற்கு உற்பட்ட அதிபர் ஆசிரியர்கள் ஒன்றினைந்து கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக முன்னெடுத்து இருந்தன.

இதன்போது பொத்துவில் கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலையை சேர்ந்த அதிபர் ஆசிரியர்கள் என சுமார் நுற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு இருந்தனர்.

இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு இருந்த அதிபர் ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கையில் அரசு தமது நீண்ட கால சம்பள முறன்பாட்டினை விரைவாக தீர்த்து வைத்து மாணவர்களின் இலவசக் கல்வியை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

# முஸ்லிம்கள் சமூகத்தை தாங்கி பாதுகாக்க கூடிய தலைவர்களை உருவாக்காவிட்டால் சமூகம் பின்னோக்கி செல்ல நேரிடும்

**(எப்.முபாரக் )**

எதிர்வருகின் காலங்களில் சிறுபான்மை முஸ்லிம்கள் சமூகத்தை தாங்கி பாதுகாக்க கூடிய தலைவர்களை உருவாக்காவிட்டால் சமூகம் பாலடைந்து மேலும் பின்னோக்கி செல்ல நேரிடும் என தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதி தொடர்பாக செவ்வாய்க்கிழமை(5) மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்: இந்த அரசின் முழு நோக்கமும் முஸ்லிம்களை பேரளவில் வெறும் பதர்களாக வைத்திருப்பதே,

ஒரு காலம் வரும் முஸ்லிம் மக்களுக்கு தனி பள்ளிவாயல்கள் தேவை இல்லை பொதுவான வனக்கஸ்தலம் அமைத்து அதில் எல்லா இனமும் வணங்க முடியும் என்ற முடிவுக்கும் தீர்வு கொடுக்கும் மர்ஜான்கள் உருவாகிவிடுவார்கள்.

நாம் நாமாகவே பரிபோகின்றோம்



என்பதை முஸ்லிம் சமூகம் உணர தவருகிறது. இதற்காக முஸ்லிம்கள் சிந்தித்து அரசியல் தலைமைகளை சிறந்த ஆளுமைமிக்க குரல் கொடுக்கக் கூடிய தலைவர்களை உருவாக்க நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம் என்பதை நான் அச்சமின்றி தெரிவிக்கின்றேன்.

அரசாங்கம் குரல் வெளியில் வெளிவராத தலைவர்களையே தம்வசம் வைத்துள்ளது, குரலை நீட்டினால் அடைத்து விடுவார்கள், அரசாங்கம் கூடியவிரைவில் கவில வேண்டிய காலம் தொலைவில் இல்லை என்றார்.

எனவே அனைத்து சமூகமும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றார்.

# கட்டுத்துவக்கு வைத்திருந்தவர் கைது

**(எப்.முபாரக்)**

திருகோணமலை கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கட்டுத்துவக்கு ஒன்றினை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த சந்தேக நபயொருவரை செவ்வாய் கிழமை கைது செய்துள்ளதாக கோமரங்கடவெல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மல்போசல, கோமரங்கடவெல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரேயே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மிருகங்களை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி வீட்டின் பின்புறத்தில் கட்டுத்துவக்கினை மறைத்து வைத்திருந்த நிலையிலே கோமரங்கடவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கட்டுத்துவக்குடன் சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்துள்ளதோடு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வலி கொண்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த நேயம் மறைந்தது

## முன்னாள் உதவி தவிசாளர் யேஜம்ஸ் யேசுதாசன்

**( வாஸ் கூஞ்ஞ)**

தன்கென்றும் ஒன்றும் தேடாது மனித நேயத்தை நோக்கி பயணித்தவரும் தமிழர்களின் தந்தை செல்வாவின் ஒரு தவப் புதல்வனாக திகழ்ந்து வலி கொண்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த நேயம் மறைந்தது என ஒரு பதவி நிலை உத்தியோகத்தராக, ஒரு சமூக சேவையாளனாக, ஒரு எழுத்தாளராக இருந்து மறைந்த அந்தோனி மார்க் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் மன்னார் நகர சபை உதவி தவிசாளர் யேசுதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு சமூக சேவையாளனாகவும் ஊடகவியலாளராகவும் திகழ்ந்த அந்தோனி மார்க் அவர்கள் அன்மையில் கொரோனா தொற்றால் காலமானதைத் தொடர்ந்து அவருக்கு மரியாதை செலுத்தும் நோக்குடன் செவ்வாய் கிழமை மன்னார் சர்வோதயத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் மன்னார் அரச அதிபர் உட்பட பல அரச சார் பற்ற மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் முன்னாள் மன்னார் நகர சபை உதவி தவிசாளர் யேசுதாசன் தொடர்ந்து தனது அஞ்சலி உரையில் தெரிவிக்



கும்போது

மனித நேயத்துக்காக ஓங்கி ஒலித்த குரல் இப்பொழுது மௌனித்து விட்டது.

அத்துடன் வலி சுமந்த தமிழ் மக்களின் விடிவுக்காகவும் உரிமைக்காகவும் ஓங்கி ஒலித்த குரல் முடங்கி விட்டது. எமக்கு துர்வஷ்டமான நிலையாக மாறியுள்ளது.

மறைந்த அன்தோனி மார்க் ஐயா ஒரு பதவி நிலை உத்தியோகத்தராக, ஒரு சமூக சேவையாளனாக, ஒரு எழுத்தாளராக இவற்றுக்கு மேலாக மனித நேயம் கொண்ட ஒரு மனிதனான வலம் வந்தவர் இவர்.

இவரை நாங்கள் அடங்காத் தமிழன் என்றே அழைப்போம். எத்தனை சவால்கள் இவருக்கு வந்தபோதும் இவரின் இறுதி மூச்சுவரை தான் சார்ந்திருந்த சமூகத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர் இவர்.

இவர் தமிழரின் தந்தையாம் செல்வாவின் ஒரு தவப்புதல்வனாகவே காணப்பட்டவர். எங்குதான் இருந்தாலும் தந்தை செல்வாவின் நினைவு நாளிலே மக்களை கூட்டி அவ் தினத்தை நினைவுகூற தவறமாட்டார்.

இவர் இங்குள்ள பெரும்பாலான மக்களுக்கு காணிகள் வழங்கும் ஒரு அதிகாரியாக இருந்தபோதும் அவருக்கென ஒரு சொந்தமான காணியோ அல்லது இடமோ இருக்கவில்லை.

இதையிட்டு அவர் ஆதங்கம் கொள்ளும் ஒரு மனிதனாகவும் இருக்கவில்லை. ஆனால் அவரின் நோக்கங்கள், சிந்தனைகள் யாவும் மனித நேயத்தை நோக்கியே நகர்ந்து கொண்டிருந்தது.

அதிலும் வலி சுமந்த மக்களுக்காக எப்பொழுதும் குரல் கொடுக்கும் ஒரு ஆன்மாகவே அவர் காணப்பட்டார்.

அவரின் இறுதி மூச்சுவரை அவர் இவற்றை செய்தார் செய்த முடித்துள்ளார். கவிஞரின் பாடல் ஒன்று வாழ்ந்தவர் கோடி வீழ்ந்தவர் கோடி ஆனால் மனிதரின் மனிதில் நிற்பவர் யார்?

ஆனால் இவர் இன்று இங்கு ஒவ்வொருவரினதும் மனதில் நிலை கொண்டுள்ளார் என்றே கூற வேண்டும். என இவ்வாறு தெரிவித்தார்.

# புல் அறுக்க வந்தவருக்கு முதலை கடித்ததாலே மரணம்;

## அட்டாளைச்சேனை மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு

**(தர்மேந்திரா)**

அட்டப்பள்ளத்தை சேர்ந்த அழகையா ஞானசேகரம் வயது 54 என்பவரின் மரணம் முதலை கடித்ததால் ஏற்பட்டது என்று அட்டாளைச்சேனை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் சமத் குமைஸ் தீர்ப்பு வழங்கினார்.

ஞானசேகரம் ஒரு ஆண், ஒரு பெண் பிள்ளைகளின் தந்தை. ஒலுவில் பகுதிக்கு வந்து மாட்டுக்கு புல் அறுத்து செல்வார். கடந்த 02 ஆம் திகதி மாலை 4.00 மணி அளவில் புல் அறுக்க வந்திருக்கிறார்.

இரவு %.00 மணியாகியும் வீட்டுக்கு திரும்பவில்லை. குடும்பத்தினர் வந்து சல்லடை போட்டு தேடினர். பின்னர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டனர்.

ஒலுவில் பல்கலைக்கழகத்துக்கு பின் பகுதியில் தென்னந்தோட்டம் உள்ளது. கடந்த 04 ஆம் திகதி மாடு மேய்த்த நபர் மாடுகள் மிரள்வதை அவதானித்தார். கூர்ந்து கவனித்த போது அங்கு உள்ள சிறிய குளத்தில் முதலையை கண்டார்.

மாடுகள் மிரண்டதால் பயந்த முதலை உடலத்தை விட்டு விட்டு ஓடியது. உடலத்தில் வலது கால் இருக்கவில்லை. முதலை அதை தின்று இருந்தது. இவர் சம்பவத்தை ஊகித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

பொலிஸார் வழங்கிய முதலாவது தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு மரண விசாரணை அதிகாரி வந்தார். இறந்தவரின் மகன் உடலத்தை அடையாளம் காட்டினார். இறந்தவரின் மனைவி, மகன், மருமகன் ஆகியோரின் வாக்குமூலங்களை பதிவு செய்தார்.

மரண விசாரணை அதிகாரியின் உத்தரவுக்கு அமைய அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியால் உடல் கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி இம்மரணம் முதலை கடித்ததால் ஏற்பட்டது என்று தீர்ப்பு வழங்கி உடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தார்.

புல் அறுக்க வந்த இடத்துக்கும், உடலம் மீட்கப்பட்ட இடத்துக்கும் இடையில் 500 மீற்றர் வரை இடைவெளி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தெளிவூட்டும் செயலமர்வு




**(யூ.கே. காலித்தீன்)**

தொற்றா நோய் பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் பொது மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கை தொடர்பான நோக்கில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும்,

கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தோடு தொடர்பான வெளிக்கள உத்தியோகத்தவர்களுக்குமான தெளிவூட்டும் செயலமர்வு சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலையில் நேற்று (06) இடம்பெற்றது.

இதில் தொற்றா நோயும் அதன் தாக்கங்கள் பற்றிய தெளிவான விளக்கத்தினை சாய்ந்த மருது பிரதேச வைத்தியசாலையின் பதில் வைத்திய அதிகாரி எம்.எச்.கே. சனூஸ் காரியப்பர் நிகழ்த்தினர்.

# பாசிப்பயறு அறுவடை விழா

**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

நாட்டில் ஏற்பட்டு இருக்கும் அசாதாரண சூழ்நிலைகாரணமாக வெளிநாடுகளில் இருந்து 16வகையான மறு வயற் பயிர்களுக்கு இறக்குமதி தடைப்பட்டிருக்கும் இக்காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் செளபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களத்தினால் பல்வேறு வகையாக பயிர் செய்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நாவிதன்வெளி மத்திய முகாம் முதலாம் பிரிவின் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட பாசிப்பயறு செய்கையின் அறுவடை விழா எம்.எஸ்.எம்.ஜனீத்கான் தலைமையில் இடம்பெற்றது.

பாசிப்பயறுகளை 3ம் போகமாக வயல் நிலங்களில் பயிர்செய்கை மேற்கொண்டு விவசாயிகளை ஊக்குவித்து மறு வயற் பயிர்களை உற்பத்தி செய்து அதிக இலாபத்தை பெற்றுக் கொள்ளல், பயிர்செய்கைக்கு தேவையான பல்வேறு உதவிகளை மானிய முறையில் வழங்கல் மற்றும் உற்பத்தி பற்றிய அறிவினையும் தெளிவினையும் வழங்கல் போன்ற பல்வேறு வகையான நடவடிக்கைகளை விவசாய திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் அன்னமலை விவசாய விரிவாக்கல் காரியாலய பிரிவின் கீழ் சுமார் 40ஏக்கர்களில் பாசிப்பயறு செய்கைகளை மேற்கொண்டு வருகின்ற இதேவேளை அம்பாரை மாவட்ட கரையோர பிரதேசங்களில் சுமார் 400 ஏக்கருக்கு மேற்பட்ட பாசிப்பயறு செய்கை மேற்கொண்டு வெற்றியும் கண்டுள்ளனர்.

# பூண்டுலோயாவில் லோறி விபத்து:ஒருவர் காயம்

**க.கிஷாந்தன்**

பூண்டுலோயா தலவாக்கலை பிரதான வீதியில் பேர்லண்ஸ் பகுதியில் குறித்த லொறி வீதியை விட்டு விலகி வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பூண்டுலோயா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்கு சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. எதிரே வந்த வாகனத்திற்கு இடமளிக்கும் போது, வீதி வழுக்கல் தன்மையுடன் காணப்பட்டதனால் மேற்படி லொறி வழுக்கி சென்று விபத்துக்குள்ளாகியதாக லொறியின் சாரதி குறிப்பிட்



டுள்ளார்.

லொறியில் சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவர் பலத்த காயங்களுக்குள்ளாகி கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


5ம். 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க கண்காணிப்பு நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

அம்பாறையில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை மனித மோதலுக்கான விரைவில் தீர்வினை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டம் உகன மற்றும் மகாஓயா பிரதான வீதியின் இரு மருங்கிலும் திடிரென வருகை தருகின்ற காட்டு யானைகளின் அச்சுறுத்தலைக் குறைப்பதற்கு நேற்று காலை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது சுமார் 2 முதல் 4 வரையிலான யாகைகள் உகன பகுதியில் உள்ள மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பினை நோக்கி வருகை தந்திருந்தது டன் அதனை விரட்டி அடிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிவில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த உடனடி நடவடிக்கை காரணமாக யானைகள் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன் அப்பகுதியில் மின்சார யானை வேலிகளை அமைத்து மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு டிபணிப்புரை வழங்கினார்.

மேலும் அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கமைய அம்பாறை மகாஓயா பிரதான வீதி காபற் இடுதல் மற்றும் யானைகள் பாதை மாறி செல்லுதல் உள்ளிட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டு எச்சரிக்கை விளம்பர பதாதைகள நிர்மாணிப்பது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகளும் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இதன் போது வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க ஊடக செயலாளர் வசந்த சந்திரபால உட்பட அதிகாரிகளும் இணைந்திருந்தனர்.

# அக்கறைப்பற்று கல்வி வலயம் சா/தர பரீட்சையில் கிழக்கில் முதலிடம்

## முதல் ஐந்து இடங்களும் அம்பாறை வசம்

(நூருல் ஹுதா உமர்)

2020ம் ஆண்டின் க.பொ.த சாதாரண தர பரீட்சை (2021) பெறுபேறுகளின் தரவரிசைப் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் அக்கறைப்பற்று கல்வி வலயம் கிழக்கு மாகாணத்தில் முதல் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ள அதே வேளை தேசிய மட்டத்தில் ஒன்பதாவது இடத்தினையும் பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் அடுத்த இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் இடங்களை முறையே அம்பாறை (தேசிய மட்டத்தில் -23), திருக்கோவில் (தேசிய மட்டத்தில் -25), மகாஓயா (தேசிய மட்டத்தில் -26), கல்முனை (தேசிய மட்டத்தில் -29) ஆகியன தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்த பட்டியலில் சம்மாந்துறை கல்வி வலயம் பத்தாவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளதுடன் தேசிய ரீதியாக 78 வது இடத்தை பிடித்துள்ளது. இருந்தாலும் இம்முறை வெளியான பெறுபேறுகளின் அடிப்படையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கடைசி இடங்களையே தக்க வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மூதூர் - இறால் குழிக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் களவிஜயம்



(அ . அச்சுதன்)

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இறால்குழி பிரதேசத்தில் தாம் ஆரம்பம் தொட்டு மேற்கொண்டு வந்த பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர் செய்ய அனுமதி வழங்குமாறு மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு பிரதேச விவசாயிகள் கொண்டு வந்ததை அடுத்து குறித்த பிரதேசத்திற்கு கள விஜயம் ஒன்றை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள மேற்கொண்டார்.

குறித்த பிரதேசத்தில் தாம் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் 80 ஏக்கருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை கடந்த காலங்களில் மேற்கொண்டதாகவும் இம் முறை அதனை விட அதிகமான பரப்பில் விவசாயம் செய்ய தேவையான அனுமதி தருமாறு இதன்போது விவசாயிகள் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனை செவிமடுத்த அரசாங்க அதிபர் பெரும் போகத்தில் விவசாயம் முடியுமான பிரதேசத்தை இனங்கண்டு அவற்றை விவசாய காணியற்றவர்களுக்கு பகிர்ந்து பயிர் செய்வதற்கு உரிய ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு இதன்போது மூதூர் பிரதேச செயலாளருக்கு அறிவுரை வழங்கினார்.

மாவட்டத்தில் பயிர் செய்ய முடியுமாமான காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொண்டு உற்பத்தியை மேம்படுத்தல் மூலமாக நாட்டினுடைய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய கூடியதாக அமையும். இதன் மூலம் மக்களது வாழ்வாதாரமும் மேம்படும். இச்செயன்முறையின்போது வனவளத்தை பாதிக்காது செயற்பாடுகளை மேற்கொள்ளல் இன்றியமையாதது என இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன்போது வன இலாகா அதிகாரிகள், திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# மகளிருக்கான அபிவிருத்தி கலந்துரையாடல்

இஃஜாஸ் ஏ பரீட்



திருகோணமலை மாவட்டத்தில்மகளிருக்கான அபிவிருத்தி சுயதொழில் வாய்ப்பு பெண்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இந் நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தில் 04 ஆம் கட்டை , முள்ளிப்பொத்தானை வெள்ளைமணல், ஆகிய மூன்று கிராமங்களில் இடம பெற்றது.

இந் நிகழ்வில் ஜனநாயக இடதுசாரி முன்னணி திருகோணமலை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகுறூப் றைசா இதில் பங்கு பற்றியிருந்தார்.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.இம்தியாஸ் , திருகோணமலை அல்-வபா நிறுவனத்தின் பணியாளர் முபாசில், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள், மீன்பிடிச் சங்கத் தலைவர்கள் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஹாதி, பொதுஜன பெரமுன சமூக இணைப்பாளர் எம்

எம்.ஏ ஜவாத் ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் பாறூக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா வலய அதிபர் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை கிண்ணியா வலய கல்வி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி நேற்று வலய கல்வி அலுவலகம் முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள அதிபர்கள் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் சங்கம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்

இதன் போது ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்குமாறு கோரி சுலோகங்களை ஏந்தி பிரதான வீதியில் வரிசையிலிருந்து அதிபர்களும் ஆசிரியர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

இதே வேளை காலை 8:30 மணி தொடக்கம் 10.30 மணி வரை இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

அமைதியான முறையில் சமூக இடைவெளிகள் பேணி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முகக் கவசம் அணிந்து ஈடுபட்டனர்.

மேலும் அதிபர்கள் ஆசிரியர்கள் தங்களது சம்பள முரண்பாட்டை நீக்கி தருமாறு தாழ்மையுடன் வலியுறுத்தி நின்றனர்

# மட்டக்களப்பில் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவின் விசேட கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.கலீஸ், தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர் கே.எஸ்.எம்.சிறாஜுன், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட மேலும் பல திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது விவசாய அமைச்சின் புதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக முன்னைய மாவட்ட உர ஒருங்கிணைப்புக்குழு இரத்துச் செய்யப்பட்டு, மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் 22 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய புதிய உர ஒருங்கிணைப்புக்குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டாளராக தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர் கே.எஸ்.எம்.சிறாஜுன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் சேதனைப்பசளை தயாரிப்பை ஊக்குவிப்பது தொடர்பாகவும், சேதனைப்பசளை தயாரப்புக்களின் தர நிர்ணயம் தொடர்பாகவும், சேதனைப் பசளையினை தயாரிக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும், சேதனைப்பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக அதிகாரிகள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# கல்முனையில் அதிபர் ஆசிரியர்கள் போராட்டம்




(செல்லையா பேரின்பராஜா)

ஆசிரியர் அதிபர் வேதனப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று கல்முனை கல்வி வலயத்திற்கு முன்பாக ஆசிரியர்கள் அதிபர்கள் ஒன்று கூடி பதாதைகளை ஏந்தியவாறு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சர்வதேச ஆசிரியர் தினத்தை கரிநாளாக அனுஷ்டிப்போம் என்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட ஆசியர்கள் அதிபர்கள் பின்வரும் பதாதைகளை தாங்கி வண்ணம் தமது போராட்டத்தை மன்னெடுத்தனர்.

ஆசிரியர் அதிபர் வேதனப்பிரச்சனைக்கு காலம் தாழ்த்தாது உடனடியாக அரசாங்கம் தீர்வினை வழங்க வேண்டும், பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதிப்படுத்து, தொற்று நோயினால் வீழ்சிசயடைந்துள்ள கல்வியை மீட்க நிதி வழங்கு, இலவசகல்வி உரிமையை பாதுகாக்கவும், ஆசிரியர் அதிபர் தொழிலின் கௌரவத்தை கெடுக்காதே, கல்விக்காக ஆறு சதவீத நிதியை ஒதுக்கீடு செய்பெற்றோரே இது உங்களின் கல்வி உரிமையை பாதுக்காக்கம் போராட்டமாகும்.

இப்போராட்டத்தில் அதிகளவான ஆசிரியர்கள் அதிபர்கள் கலந்து கொண்டு தமது உரிமையை வென்றெடுப்பதற்காக எறிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய அலுவலகத்திற்கு முன்பு கவனயீர்ப்பு



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய அலுவலகத்திற்கு முன்பாக புதன்கிழமை அதிபர், ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் தினமான இன்று, கடந்த 24 ஆண்டுகளாக தீர்க்கப்படாத சம்பள முரண்பாட்டினை தீர்க்க கோரியும், மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க கோரியும் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட தலைவர் த.கோகுலறமணன் உள்ளிட்ட அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(படுவான்பாலகன்)

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

## Are you after O/Levels?

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now

## UNSW FOUNDATION STUDIES

Contact us to start your journey

Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

**சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான** The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) **தனது** Foundation studies **கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள** AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) **கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.**

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

## Are you exploring opportunities for world class education with an Australian University?

**The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .**

**AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.**

**For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021**

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

**மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya - 077 4898 773**

Child Friendly Cities Initiative

# Batticaloa Kids Got Talent

# CONTEST

## For Children's Day 2021

வயதெல்லை: 5-15

உங்கள் ஆக்கங்களை எங்களுடன் புகைப்படமாகவோ அல்லது வீடியோ பதிவாகவோ பகிர்ந்து கொள்ளுங்கள்:

- வரைதல் (புகைப்படத்தை அனுப்பவும்)
- நடன வீடியோ
- பேச்சு வீடியோ
- வீட்டுத் தோட்ட வீடியோ சுற்றுப்பயணம்
- கைவேலைப்பொருட்கள் -உங்கள் சொந்த படைப்புகள் வீடியோவாக
- கதை சொல்லும் வீடியோ
- பாடல் பாடிய வீடியோ

கீழே உள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் ஆக்கங்களுக்காக தெரிவு செய்யவும்.

1.கோவிட் 19 தொற்றுநோய் உங்கள் வாழ்க்கை, கல்வி மற்றும் கனவுகளை எவ்வாறு பாதித்தது?

2. உங்கள் நகரை சிறுவர் சிநேகமாக எவ்வாறு பார்க்க விரும்புகிறீர்கள்?

உங்கள் படைப்புகளை பின்வரும் வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் 15.10.2021 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

+94768183878

Tharniya.Thavendraan@CERIkids.org

ceri

unicef for every child


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் கோட்டபாய வரை நம் நாடு தொடர்பாக ஒரு முகம், ஒரு கொள்கை இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா

டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவரை இவர்கள் எவருக்கும் எம் நாடு தொடர்பாக ஒரு முகம் இல்லை. ஒரு கொள்கை இல்லை, நம் நாட்டின் பல்லினத் தன்மையை எற்றுக் கொள்ளும் மனோபாவம் கூட இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

இன்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சம்மந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரிலே எரிபொருள், எரிவாயு எடுக்கலாம் என்ற பே;சசக்கள் வதந்திகள் இருக்கும் இந்த நேரத்தில் இலங்கையில் ஐ.ஓ.சி நிறுவனம் சம்மந்தமாகவும், திருகோணமலையில் இருக்கும் எண்ணெய்த் தாங்கிகள் சம்மந்தமாகவும் விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நான் சார்ந்த பிரதேசம் மற்றும் என் இனம் சம்மந்தமாகவும் சில கருத்துக்களைக் கூற நினைக்கின்றேன்.

அதற்கும் மேலாக இன்று ஆசிரியர் தினம். ஏணிப்படிகளாக இருந்து மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து அவர்களை நற்பிரஜைகளாக ஆக்கும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று அவர்கள் வீதியிலே இறங்கிப் போராடும் ஒரு நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளிவிட்டிருக்கின்றது. அவர்களது அபிலாசைகள் தீர்த்துவைக்கப் படாத காரணத்தினால் அவர்கள் இன்று போராடும் நிலைக்கு வந்திருக்கின்றார்கள். அதனால் எதிர்காலத்தில் மாணவர்களின் கல்விநிலை எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் ஆசிரியர்களது கோரிக்கைகளை அரசு செவிமடுத்து உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும்.

அத்துடன் இந்த நாடடின் உணவு உற்பத்தியில் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகள் இன்று மிகவும் வேதனையுடன் அவர்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. இன்று சேதனைப் பசளை, நஞ்சற்ற உணவு தயாரிப்பு என்றெல்லாம் கூறி அவர்கள் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகள் தான் நடைபெறுகின்றன. சேதனைப் பசளையின் முழுமையான உற்பத்தி இங்கு கிடையாது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்கின்றீர்கள் அதிலும் கிருமிகள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சீனாவில் இருந்து வந்த சேதனப் பசளைகளில் தொற்றுக் கிருமிகள் இருப்பதாக நிராகரித்தமைக்காக விவாசய அமைச்சருக்கும், அவருடன் சம்மந்தப்பட்ட பகுப்பாய்வாளர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்று அதனை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு யோசிக்கின்றீர்கள். சேதனப் பசளையில் நைதரசன் எத்தனை வீதம் இருக்கின்து. யூரியாவில் எத்தனை வீதம் இருக்கிறது. தற்போதும் யூரியா சந்தையில் கிடைக்கின்றது. ஆனால் அதன் விலை மூன்று மடங்கிற்கு அதிகமாக இருக்கின்றது. இப்படி இருக்க விவசாயிகள் எவ்வாறு தங்கள் விசாயத்தைச் செய்வார்கள்.

ஒரு ஏக்கர் வேளாண்மைக்கு நாற்பது ஐம்பது மூடைகள் விளைவித்தவர்கள் இன்று இருபது மூடைகள் விளைவிப்பதற்கும் முடியாமல் இருக்கின்றார்கள். இவ்வறான நிலைமை ஏற்பட்டால் தொடர்ச்சியாக அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையே ஏற்படும். அவ்வாறு இருக்கும் போது இந்த நாடு எவ்வாறு தன்நிறைவை அடையும்.



சேதனைப் பசளை மூலமாக தேயிலைப் பயிர்செய்கை கூட இன்று பாதிப்படைவதாக முன்னாள் பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திசாநாயக்க அவர்கள் கூறியிருக்கின்றார். இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு தேயிலை ஏற்றுமதி. அதுகூட பாதிப்படையும் நிலையில் இருக்கின்றது.

இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், அரசாங்கம் போன்றனவற்றிற்கு ஒரு கொள்கை இருக்க வேண்டும். நான் சார்ந்த கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு கொள்கை, ஒரு இலக்கு இருக்கின்றது. எமக்கு ஒரு முகம் மாத்திரமே இருக்கின்றது. பாராளுமன்றத்தில், பிரதேசத்தில், எமது மக்களிடத்தில், உள்நாட்டில் அல்லது சர்வதேசத்தில் எங்கு எப்போது எவ்விடம் சென்றாலும் நாம் ஒரு முகத்தையே காட்டி வருகின்றோம். ஆனால் எமது ஜனாதிபதி, பிரதமர் ஆட்சியாளர்கள் என இந்த ஆட்சியாளர்கள் மட்டுமல்ல டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிறேமதாச, சந்திரிக்கா பண்டாரநாயக்கா, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஏன் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச வரை இவர்கள் எவருக்கும் எம் நாடு தொடர்பாக ஒரு முகம் இல்லை. ஒரு கொள்கை இல்லை, நம் நாட்டின் பல்லினத் தன்மையை எற்றுக்கொள்ளும் மனோபாவம் கூட இல்லை.

அத்தகைய எமது நாட்டின் ஜனாதிபதி அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து எமது புலம்பெயர் அமைப்புகளுக்கு கலந்துரையாட அழைப்பு விடுத்தார். புலம்பெயர் அமைப்புகளையும், நபர்களையும் தடைசெய்து விட்டு அவர்களைப் பேச்சுக்கு அழைப்பது நகைப்புக்கிடமானது. உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தீர்வு காண்பேன் என்று அவர் சொல்லி மூச்சு விடுவதற்குள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் இராஜாங்க அமைச்சர் அங்குள்ள தமிழ் அரசியற் கைதிகளின் மனித உரிமையையும், மான்பையும் சிறப்பாகக் கவனித்தார். இதுதான் உள்ளகப் பொறிமுறை என்னும் ஒரு சோற்று உதாரணம்.

இதனை விட இன்றைய பிரதமரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையிடமும், ஐநா மனித உரிமைகள் பேரவையிடமும் பதின்மூன்று போதாது பதின்மூன்று பிளஸிற்ச் செல்வேன் என்றார். இவை எதை எப்படிப் பேச வேண்டுமோ அதை அப்படிப் பேசி உள்நாட்டையும், சர்வதேசத்தையும் தம்வசப்படுத்தி தனது இலக்கை அடையும் பக்குவம் பெற்றவர்கள் எமது ஆட்சியாளர்கள் என்பதையே காட்டுகின்றது. அதன் தொடர்கதைததான் தற்போதைய ஜனாதிபதியின் உரையும், புலம்பெயர் அமைப்புகளைக் கலந்துரையாடலுக்கான அழைப்பும். உள்நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்புகளை அழைப்பதென்பது அவசரத்தில் புத்தி மழுங்கிய செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது. கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி எமக்கு வைகுண்டம் காட்டும் உரையே அவரது உரை. எம் தமிழ் மக்கள் தொடர்பாக, எமது வடக்கு கிழக்கு நிலம் தொடர்பாக, எமது தமிழ் மொழியின் பாவனை தொடர்பாக, எமது ஆறு தசாப்த அகிம்சை, ஆயுத வழிப் போராட்டம் தொடர்பாக எவ்வித புரிதலும் தெளிவும் பெறும் எண்ணம் இன்னும் ஆட்சியாளர்களிடம் இல்லை.

ஜனாதிபதி ஒரு கருத்து, பிரதமர் ஒரு கருத்து, ஜனாதிபதி சார்பான அமைச்சர்கள் ஒரு கருத்து, பிரதமர் சார்பான அமைச்சர்கள் ஒரு கருத்து, தமிழர்களுக்கு என்ன பிரச்சனை உள்ளது என்போர் ஒருபறம் என இவர்களா எமது பிரச்சனைகளுக்குத் தீர்வு தருவார்கள்.

இன்று பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் பற்றிப் பேசப்படுகின்றது. பதின்மூன்றாவது திருத்தச் சட்;டம் எப்படி எதற்காக உருவாக்கப்பட்டது என்பது பற்றி அறிந்து கொள்ள வேண்டும். புறையோடிப் போயுள்ள இனப் பிரச்சனைக்கு இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் உருவாகியது. மாகாணசபை முறைமை உருவாகியது. மாகாணசபைத் தேர்தலும் நடந்தது. இன்று மூன்று நான்கு வருடங்களுக்கு மேலாக மாகாணசபைத் தேர்தல் இல்லாமல் குட்டி ஜனாதிபதியாக ஆளுநரின் கையிலே மாகாணங்கள் இருக்கிறது. மிக விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தி மாகாணசபைகளுக்குரிய பூரண அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# சமாதான நீதவான்

(இ.சுதாகரன்)

**அதிபர் சித்திரவேல் சசிதரன் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்**

**திருகோணமலை மாவட்டம் மூதூரைச் சேர்ந்த அமரர் வீரபத்திரன் சித்திர வேல் (முன்னாள் அதிபர்) மற்றும் பூபால பிள்ளை சறோஜா தேவி ஆகியோரின் மூத்த புதல்வரான திரு.சி.சசிதரன் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் பெற்றுள்ளார்.**

**புகழ் பெற்ற ஆயுர் வேத வைத்தியர் க.பூபாலபிள்ளை(கோட்டுப் பரிசாரியார்) அவர்களின் மூத்த பேரனாகிய இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியினை தி /மூ /புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட துன்பியல் நிலைமை காரணமாக இடம் பெயர்ந்து தமது சொந்த இடமாகிய களுவாஞ்சிகுடியில் குடியமர்ந்து களுதாவளை மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த.உயர்தர(வர்த்தகப்பிரிவு) கல்வியினை பூர்த்தி செய்த பின்னர் இளைஞர் சேவை மன்றத்தின் ம.தெ.எ.பற்று பிரதேச தலைவராகவும் களுவாஞ்சிகுடி ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தின் செயலாளராகவும் திகழ்ந்த இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டத்தினை பூர்த்தி செய்தார்.**

**மயோன் கல்வி நிலையத்தில் கணனி டிப்ளோமா, இளைஞர் சேவை மன்றத்தில் சிங்கள டிப்ளோமா ஆகிய கற்கை நெறியினை பூர்த்தி செய்த இவர் 30 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் நுவரெலியாவில் சர்வோதய வங்கியில் மாவட்ட உதவி முகாமையாளராக தடம்பதித்த இவர் அக்காலப்பகுதியில் இலங்கை வர்த்தக**



**சங்கத்தில் பட்டப்பின் திறன் விருத்தி கற்கையினை நிறைவு செய்திருந்தார்.**

**1998 காலப்பகுதியில் மட் /பட் /மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக இணைந்து கொண்ட இவர் பின்னர் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம்,கோட்டைக் கல்லாறு மகாவித்தியாலயம்,பெரிய கல்லாறு மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் ஆசிரியராக பணியாற்றிய நிலையில் 2009. ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து துறைநீலாவணை மகா வித்தியாலயத்திற்கு பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார்.பின்னர் பதவி உயர்வு பெற்று களுதாவளை சாந்திபுரம் விபுலானந்தர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.பின்பு களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயத்தில் பல காலங்கள் அதிபராக கடமையாற்றிய பிற்பாடு தற்போது பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றி வருகின்றார். இலங்கை அதிபர் சேவை தரம் 1சேர்ந்த இவர் பட்டப்பின் டிப்ளோமா கற்கையினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும்,முதுமாணி பட்டத்தினை கிழக்கு பல்கலைக் கழகத்திலும்,கிழக்காசிய முகாமைத்துவம்,களகுஈ இலங்கை வர்த்தக சம்பளன பீடத்திலும் பெற்றுக் கொண்டார்.**

**சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் புலமை கொண்ட இவர் குறித்த இரு மொழிகளிலும் டிப்ளோமா கற்கையினை பூர்த்தி செய்ததுடன் அதிபர்களுக்கான வாண்மை விருத்தி மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தில் கருப்பொருள் பாட நெறியினையும் பூர்த்தி செய்துள்ளார்.**

**சிறந்த சமுக சேவையாளரான இவர் களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலத்தின் பிரதிச் செயலாளராகவும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளராகவும்,தற்போது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளராக செயற்பட்டு வருகின்றார்.**

# வந்தான் வரத்தான்கள் முஸ்லிம்களை வழிநடத்த அனுமதிக்க முடியாது

### பாராளுமன்றத்தில் கோதித்தெழுந்தார் ஹரீஸ் !

மாக்கர், கபீர்காஸிம், ரவூப் ஹக்கீம் போன்றோர்களும் முஜிப் ரஹ்மான் போன்றோர்களுக்கும் இருக்கிறார்கள். இவர்களுக்கு இல்லாத ஞானமா இவருக்கு வந்துள்ளது. நிதானமாக பேசக்கூடிய தமிழ் தலைமைகளும் இந்த சபையில் இருக்கிறார்கள். இந்த சபையில் எதைப்பேசவேண்டும் எதைப் பேசக்கூடாது என்று தெரியாமல் ஒருவர் மட்டும் காவடி எடுத்து ஆடுவதை அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நேற்று (06) பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கு போது, இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழும் சமூகமாக 1000 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் வாழ்ந்து வருகிறது. அப்படியான சமூகத்தை நோக்கி ஞானசார தேரர் போன்றோர்கள் இழிசொற்களை பேசிவருவதுடன் அண்மையில் அல்லாஹ் தான் ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம் என்று பேசியுள்ளார். இவருக்கு எவ்வகையான நடவடிக்கையை எடுப்பது என்று முஸ்லிம் புத்திஜீவிகளும், மார்க்க அறிஞர்களும், நாங்களும் பேசி பாராளுமன்ற கலறிக்கு பேசாமல் உரிய சட்டநடவடிக்கை எடுக்க முடிவெடுத்து பொலிஸிலும், குற்றப் புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்துள்ளோம்.

அந்த சட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை செய்த போது பாராளுமன்றத்தில் ஒரு மாற்று சமூக உறுப்பினர் இவ்விடயம் தொடர்பில் கடுமையாக பேசினார். அவரின் உரைக்கு நாங்கள் தடைபோட்டவர்கள் அல்ல. அவருக்கு அதற்கான உரிமை இருக்கிறது. அவர் அநாகரிகமாக முஸ்லிம் எம்.பிக்கள் ஊருக்கு வந்தால் தாக்குங்கள் என பேசி முஸ்லிங்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு முயற்சி செய்கிறார். இதனால் முஸ்லிம் சமூகம் கொதிப்பதடைந்துள்ளது. அவர் பொதுவெளியில் பேசமுதலில் முஸ்லிம் வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும். சிங்கள முஸ்லிம் உறவு ஆயிரம் வருடங்களை விட கூடியது. எம்.சி. அப்துல் ரஹ்மானில் தொடங்கி இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பல முஸ்லிம் தலைவர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள். கடந்த காலங்களில் 2014 இல் அலுத்கம பிரச்சினையின் போது நாங்கள்தான் போராடினோம், 2001 இல் மாவனெல்லை பிரச்சினை வந்தபோது தலைவர் ஹக்கீம் அமைச்சு பதவிகளை தூக்கி வீசினார். 2019 இல் சஹ்ரானின் பிரச்சினை வந்தபோதும் நானுட்பட சகல முஸ்லிங்களும் அமைச்சுக்களை தூக்கி வீசிவிட்டு சமூகத்தின் நலனுக்காக நின்றோம். முஸ்லிம் எம்.பிக்களான நாங்கள். கண்டி, மினுவான்கொட, திகன, காலி ஜிந்தோட்ட அம்பாறை போன்ற பிரதேசங்களில் பிரச்சினை வந்த போதும் சமூக உரிமைக்காக களத்தில் இறங்கி போராடினோம். அது மாத்திரமின்றி கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் முஸ்லிங்களை விடுதலை புலிகள் கொன்று குவித்த போது முஸ்லிம் எம்.பிக்களே அதற்கு முகம் கொடுத்தார்கள் என்பது வெளிப்படையான வரலாறு.

விவாக விவாகரத்து, மாடறுப்பு என முஸ்லிங்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கும் இந்த கால கட்டத்தில் அரசுடன் பேசி தீர்வுகாண முற்படும் போது இளைஞர்களை குழப்பி திசைதிருப்ப முயற்சிக்கிறார் அவர். அவரது பாட்டனாரும், தமிழர் விடுதலை கூட்டணியினரும் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தூக்கி தமிழ் தலைமைகளுக்கு எதிராக போராட வழிகாட்டினார்களோ அதே பாணியில் முஸ்லிம் இளைஞர்களை உசுப்பி விடுகிறார். அப்படி பேச இவருக்கு என்ன உரிமை இருக்கிறது. எங்களின் மூச்சி இந்த சமூகத்தின் பால் உள்ளது. ஆனால் இரட்டை வேடம் போட யாரையும் அனுமதிக்க முடியாது. இங்கு முஸ்லிங்களை பற்றி பேசுபவர் வடகிழக்குக்கு சென்று வடகிழக்கை இணைக்க வேண்டும் என்கிறார். ஆனால் அவருக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் எதிர்காலம் தொடர்பில் பதில் இல்லை. அதே போன்று கல்முனை விவகாரத்தில் எவ்வித முன்னறிவுமின்றி வெறுமனே கல்முனை உபபிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோருகிறார். கல்முனை முஸ்லிங்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பில் அவரால் விளங்க முடியாமல் உள்ளது. கலரிக்கு பேசி முஸ்லிம் இளைஞர்கள் மனதில் நச்சு எண்ணங்களை விதைக்க யாரையும் அனுமதிக்க முடியாது. முஸ்லிங்களின் பூகோள இருப்புகளோ அல்லது முஸ்லிம் சமூக கட்டமைப்புக்களோ தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் 1600 முஸ்லிம் கிராமங்கள் உள்ளது. அதில் வடகிழக்குக்கு வெளியே 900 முஸ்லிம் கிராமங்கள் சிங்கள மக்களுடன் இணைந்ததாக உள்ளது. அந்த கிராமத்தில் வாழும் இளைஞர்களை தூண்டி சிங்கள முஸ்லிம் உறவில் விரிசலை உண்டுபண்ண முயறசிக்கிறார். இதனால் அந்த மக்களின் இருப்புக்கள் கேள்விக்குறியாகிறது. இதனை அனுமதிக்க முடியாது அம்பாறையில் நிறைய காணிப்பிரச்சினை இருக்கிறது. அதை தீர்க்க அம்பாறை அரசாங்க அதிபருடன் கடந்த வாரம் கலந்துரையாடி தீர்வை நோக்கி நகர்கிறோம். 26 வீதம் மட்டக்களப்பில் வாழும் முஸ்லிங்களுக்கு வெறுமனே 01 சதவீத காணிகள் மட்டுமே உள்ளது. அதே போன்று திருகோணமலையில் 44 வீதம் வாழும் முஸ்லிங்களுக்கும் காணிப்பற்றாக்குறை நிலவுகிறது. தோப்பூர் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாக இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. குச்சவெளியில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத காணிப்பிரச்சினை இருக்கிறது. இவற்றினை யார் பேசுவது ? யாரிடம் பேசுவது என்பதை சிந்திக்க வேண்டும்.

கலரிக்கு பேசி சமூகத்தை உசுப்பிவிட்டு பிரச்சினைக்குள் சமூகத்தை மாட்டிவிட முடியாது. இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களென யாராக இருந்தாலும் முதலில் அவர்களின் வறுமையை ஒழித்துக்கட்ட வேண்டும். அதற்காகவே தூய்மையான அரசியலை முன்னெடுக்க முயல்கின்ற போது காட்டிக்கொடுப்பாளர்கள், துரோகிகள் என்ற பட்டங்கள் எல்லாம் கடந்த காலங்களில் தமிழ் அரசியலிலிருந்து தோற்றுப்போனது வரலாறு. அதே போன்று முஸ்லிம் அரசியலிலும் காட்டிக்கொடுப்பு அரசியல் கலாச்சாரத்தை முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்க யாரையும் அனுமதிக்க முடியாது

கடந்த 04 பாராளுமன்ற தேர்தல்களில் வென்று உறுப்பினராகியது மட்டுமின்றி கல்முனை முதல்வராகவும் இருந்துள்ளேன். எங்களை சமூகத்திலிருந்து ஓரங்கட்ட முடியும் என்றால் அது அவர்களின் பகற்கனவு. அவருக்கு எதிராக பேச இந்த சபையில் யாருமில்லை என்று நினைத்து விடக்கூடாது. இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் முஜீப் ரஹ்மான் அவர்களே ! நீங்கள் முஸ்லிம் சமூகத்தை வழி நடத்தும் பொறுப்பினை வந்தான் வரத்தான்களின் கையில் ஒப்படைக்க விரும்புகிறீர்களா? தயவு செய்து இடமளிக்காதீர்கள். ஏனென்றால் தமிழ் இளைஞர்களையும் இவ்வாறுதான் கடந்த காலங்களில் உசுப்பேற்றி அந்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் அழிய நேரிட்டது. அவ்வாறான ஒரு ஆபத்து முஸ்லிம் சமூகத்திற்கு வர இடமளிக்க முடியாது என்றார்



முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்



# இன்று நவராத்திரி விழா ஆரம்பம்: கோலு வைத்தல் சிறப்பு!

இந்துக்கள் அனுஸ்டிக்கும் விரதங்களுள் நவராத்திரி விரதம் முக்கியமானதாகும். சக்தியை நோக்கி 9தினங்கள் விரதமிருந்து அனுஸ்டிக்கும் மகத்தானவிரதம். இவ்விரதம் இன்று %ஆம் திகதி முதல் 9தினங்கள் அனுஸ்டிக்கப்பட்டு 16ஆம் திகதி விஜயதசமியுடன் நிறைவடையவுள்ளது.

சக்தியை நோக்கி அனுட்டிக்கும் விரதங்களில் ஒன்றுதான் நவராத்திரி விரதம். மனிதனுக்கு அவசியமான ஆற்றலின் அதிதேவ



தையாக விளங்குகின்ற சக்தியைப் போற்றும் விரதமாக நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது.

நவராத்திரி நோன்பு (விரதம்) புரட்டாதி (புரட்டாசி) மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சக்தியை (தேவியைக்) குறித்து நோற்கப்படும் நோன்பாகும். இது தட்சணாயண காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். உத்தராயணத்தில் வசந்த நவராத்திரியும் தட்சணாயண காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும்.

இவை இரண்டிலும் புரட்டாதி மாதத்தில் நோற்கப்படும் சாரதா நவராத்திரியே நவராத்திரி விரதமாக அனுசரிக்கப்படுகிறது.

பேரழிவுக் காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தைச் உண்டாக்க விரும்பினபோது இச்சை என்ற சக் தியும் அது எவ்வாறு தோன்றியது என்று அறிந்தபோது ஞானசக்தியும் தோன்றின. பின் கிரியா சக்தியினால் இறைவன் உலகைப் படைத்தான் என்ற கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது.

## நவராத்திரி விழா

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான்.

நடுவில் உள்ள மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு கரண புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான்

இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறு அருள் வழங்குகின்றான் என்பது சிவாகமத்தின் உள்ளுறையாகும்.

ஆலயங்களிலும் இல்லங்களிலும் பிம்பம் (உருவம்) கும்பம் இவைகளால் ஒன்பது நாட்களிலும் வழிபடுபவர்கள் நவராத்திரிக்கு வேண்டிய பூசைக்குத்தேவையான பொருட்களைஅமாவாசையன்றே சேகரித்துக் கொண்டு அன்று ஒரு வேளை உணவு உண்டு பிரதமையில் பூசை தொடங்கவேண்டும்.

விஜய தசமி

நவராத்திரியில் துர்க்காதேவி மகிஷாசுரனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின்போது மகிஷாசுரனை வதம் செய்தாள் என்றும் இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடியபடியால் விஜயதசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு. இவ்விழா மிகவும் விமரிசையாக கொண்டாடப்படும்.

## கன்னி வாழை வெட்டல்

ஆலயங்களில் விஜயதசமி அன்று வன்னி மரத்துடன் கூடிய வாழை வெட்டுவது வழமை. பண்டாசுரனுடன் தேவி போர் செய்து அவனை அழிக்கமுடியாமல் சிவபிரானை வழிபட்டு விஜயதசமியில் போர் செய்யும் போது அவன் வன்னி மரத்தில் ஒளிந்தான்.



தேவி வன்னி மரத்தை சங்கரித்து அசுரனைச் சங்காரம் செய்தாள் என்பர். இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவி வழங்கலாயிற்று. அசுரனைச் சங்கரித்த நேரம் மாலை வேளை, செங்கட் பொழுதில் இதனை ஞாபகப்படுத்தும் முகமாக வாழை வெட்டுவது வழக்கம்.

## கொலுவைத்தல்

இதன்போது கொலுவைத்தல் முக்கியமானதொரு அம்சமாகக்கருதப்படுகிறது. அது பற்றி இங்கு பார்க்கலாம்.

நவராத்திரி கொலு வைப்பதில் ஒரு தத்துவம் உள்ளது. மனிதன் எவ்வகையிலேனும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். மனிதன் படிப்படியாக உயர்த்திக் கொண்டு இறுதியில் இறைவனில் கலக்க வேண்டும். இதுவே மனிதப் பிறப்பின் அடிப்படை தத்துவம்.

இதை விளக்கும் பொருட்டே கொலுக் காட்சியில் ஒன்பது படிகள் வைத்து அதில் பொம்மைகளை அடுக்கி வழிபடுகிறோம்.

**முதல்படி - ஓரறிவு உயிர்ப் பொருட்களான புல் செடி கொடி போன்ற தாவர பொம்மைகள்**

**இரண்டாம்படி - இரண்டறிவு கொண்ட நத்தை சங்கு போன்ற பொம்மைகள்**

**மூன்றாம்படி - மூன்றறிவு உயிர்களான எறும்பு ஊறும் உயிரின பொம்மைகள்**

**நான்காம்படி - நான்கறிவு உடைய நண்டு வண்டு பொம்மைகள்**

**ஐந்தாம்படி - ஐந்தறிவு கொண்ட நாற்கால் விலங்குகள் பறவைகள் பொம்மைகள்**

**ஆறாம்படி - ஆறறிவு படைத்த மனிதர்களின் பொம்மைகள்**

**ஏழாம்படி - மனிதனுக்கு மேற்பட்ட மகரிஷிகளின் பொம்மைகள்**

**எட்டாம்படி - தேவர்கள் உருவங்கள் நவக்கிரக அதிபதிகள் பஞ்சபூத தெய்வங்கள் அஷ்டதிக் பாலகர்கள் முதலிய பொம்மைகள்**

ஒன்பதாவதுபடி - பிரம்மா விஷ்ணு சிவன் மும்மூர்த்திகள் அவர்தம் தேவியர்களான சரஸ்வதி லட்சுமி பார்வதி பொம்மைகள் (ஆதிபராசக்தி நடுவில்) இருத்தல் வேண்டும்.

(வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு நிருபர்)




# 24 வருட காலமாக புறையோடியிருக்கின்ற சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும்

## மன்னாரில் ஆசிரியர் போராட்டத்தில் தெரிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

உலக ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் இந்த தருணத்தில் எமது கோரிக்கையான 24 வருட காலமாக புறையோடியிருக்கின்ற சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும் என எதிர்பார்த்து நிற்கின்றோம் என இலங்கை மன்னார் ஆசிரியர் சங்க போராட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் நாடலாவிய ரீதியில் ஆசிரியர் சங்கமானது அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை முன்வைத்து புதன் கிழமை கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் மன்னார் மாவட்டத்திலும் இவ் கவனயீர்ப்பு போராட்டம் இலங்கை ஆசிரியர் மன்னார் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் கல்வி வலயத்துக்கு முன்னால் வீதியின் இரு மருங்கிலும் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இவ் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை பத்து மணிக்கு ஆரம்பித்த இவ் கவனயீர்ப்ப போராட்டமானது சுமார் ஒரு மணி நேரம் இவ் போராட்டம் நீடித்தது.

இவ் போராட்டத்தின்போது ஆசிரியர்கள் தங்கள் கைகளில் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷம் எழுப்பிய வண்ணம் இவ் போராட்டத்தில் ஈடுபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவர்கள் இங்கு தங்கள் கருத்துக்களை முன்வைக்கையில் இன்று (06) உலக ஆசிரியர் தினத்தை கொண்டாடிக் கொண்டு இருக்கும் சூழ்நிலையில் எங்களுக்கு 24 வருடங்களாக இழுத்தடிக்கப்படும் சம்பள முரன்பாடானது இன்னும் தீர்க்கப் படாது இருந்து வருகின்றது. எனவும்இந்த சம்பள முரன்பாடுகளுக்கான கோரிக்கைகள் சம்பந்தமாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டும் அவைகள் இருட்டறையிலேயே வைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

எனவே ஆசிரியர் அதிபர்களை அவர்களின் கற்பித்தல் நடைமுறைகளுக்கு வழிவிடுமாறும் எங்களை வீதிகளில் இறக்காதிருக்கவும் இலவச கல்வியை முதலாளித்துவத்துக்கு உட்படுத்தாதிருக்கவும் கல்விக்கு ஆறு வீத நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் நாங்கள் இவ் தருணத்தில் இவைகளை வேண்டி நிற்கின்றோம்.

எங்கள் சம்பள கோரிக்கையானது ஆசிரியர் தினமாகிய இந்த நேரத்திலாவது அரசு இவைற்றை நிவர்த்தி செய்யும் என நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஆகவே இதன் மூலம் ஆசிரியர்களின் நல்வழிகாட்டலில் மாணவர்களை நல்வழிப்படுத்த அரசு முன்வர வேண்டும் என இந்நேரத்தில் வேண்டி நிற்கின்றோம் என இவ்வாறு தெரிவித்தனர்.

இவ் போராட்டத்தின்போது மன்னார் கல்வி வலயத்துக்கு முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

# 1,100 கிராம் கேரளா கஞ்சாவுடன் நான்கு பிள்ளைகளின் தாய் அதிரடிப்படையினரால் கைது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பெரியநீலாவணை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிள்ளையாரடி சந்தியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 1100 கிராம் கேரளா கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டீ.சி. ரத்நாயக்க தலைமையிலான சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜீ.எஸ்.பி.பண்டார, பொலிஸ் சார்ஜென்ட் குணபால மற்றும் சுபசிங்க, அபேரத்ன, நிம்ஸ் ஆகிய விசேட அதிரடிப்படை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குறித்த பகுதியை சுற்றி வளைத்தனர்.

இதன்போது நீண்ட காலமாக மட்டக்களப்பு மாவட்ட கிராமப் பகுதிக்கு கேரளா கஞ்சாவை விற்பனை செய்து வந்த நான்கு பிள்ளைகளின் தாய் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வெல்லாவெளி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதனையடுத்து மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொத்மலை கல்வி வலய அதிபர் ஆசிரியர்கள் போராட்டம்



(க.கிஷாந்தன்)

சம்பள முரண்பாடு, நிலுகைக் கொடுப்பனவுகள் உட்பட மேலும் சில பிரச்சினைகளுக்கு தீர்வை கோரி அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாளிலேயே, அத்தினத்தை கருப்பு நாளாக அறிவித்து, தமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அதிபர், ஆசிரியர்கள் இன்று தொழிற்சங்க போரோட்டத்தில் இறங்கினர்.

நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. மலையகத்திலும் நுவரெலியா, பூண்டுலோயா, அட்டன் உள்ளிட்ட பகுதிகளில் ஆசிரியர்களின் போராட்டங்கள் இடம்பெற்றன.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடப்போவதில்லை எனவும், பாடசாலைகளை திறப்பதற்கு முன்னர் தீர்வு அவசியம் எனவும் ஆசிரியர்கள் வலியுறுத்தினர்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு அடிக்கல்

(திருக்கோவில் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிருவாக எல்லைக்குட்பட்ட திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கூடத்தினை புனரமைப்புக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.வி.மர்சூத் தலைமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்று இருந்தன.

அந்நவகையில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் மிக நீண்ட கால முக்கிய தேவைப்பாடாக கோரப்பட்டு வந்த அதி நவின வைத்திய உபகரணங்களுடன் கூடியதான சத்திர சிகிச்சை கூடத்தின் புனரமைப்புக்கான அடிக்கல் நடப்பட்டு இருந்தன.

இவ் அதி நவின சத்திர சிகிச்சை கூடத்தின் கட்டத்தின் புனரமைப்பு பணிகளுக்காக 2.5 மில்லியனும் சத்திர சிகிச்கை கூடத்தின் மருத்துவ உபகரணங்களின் கொள்வனவுக்காக 08 மில்லியனும் ஆய்வுகூட மருத்துவ உபகரணங்களுக்கு 20 மில்லியன் என 30.5மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக இருந்த போதிலும் அங்கு பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டு வந்ததுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் முயற்சியின் ஊடாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.வி.மர்சூத்தின் தலைமையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கான சிமாட் தகவல் தெரிநுட்ப வசதிகளும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ஏற்படத்தி கொடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.வி.ஏ.வாஹீத் கல்முனை பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹீர் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டு சத்திர சிகிச்சை கூட புனரமைப்புக்கான அடிக்கல்லினை நட்டு வைத்திருந்தனர்.

# திருக்கோவில் சமுர்த்தி பிராந்திய கணக்காய்வு பிரிவு திறந்து வைப்பு



(வி.சுகிர்தகுமார் )

சமுர்த்தி திட்டத்தின் மற்றுமொரு மைல்கல்லாக பட்டதாரிகளையும்; உள்வாங்கிய பிராந்திய கணக்காய்வு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அவ் அலகிற்கான காரியாலயங்களும் அம்பாரை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக முதற்தடவையாக ஆலையடிவேம்பு பொத்துவில் திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய திருக்கோவில் பிராந்திய கணக்காய்வு பிரிவு அலகிற்கான காரியாலயம் உருவாக்கப்பட்டு அதனை திறந்து வைக்கும் நிகழ்வும் இன்று நடைபெற்றது.

அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரும் நிலையப் பொறுப்பதிகாரியுமான ஏ.கே.பௌசல் அமீன் தலைமையில் இடம்பெற்ற அலுவலக திறப்பு விழா நிகழ்வில் அம்பாரை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் காரியாலய பெயர் பலகையினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் மற்றும் உதவிப்பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து அலுவலக வளாகத்தில் மரநடுகை இடம்பெற்றதுடன் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் பின்னராக சமய அனுஸ்டானம் இடம்பெற்றதுடன் தலைமை உரையும் உத்தியோகத்தர்கள் அறிமுக நிகழ்வும் காரியாலய நிலை தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தலும் நடைபெற்றது.

நிறைவாக உதவிப்பிரதேச செயலாளர் உரையாற்றியதுடன் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரும் உரையாற்றினார்.

அவரது உரையில் மிகவும் சிறப்பாக பிராந்திய கணக்காய்வு பிரிவு அலகை ஆரம்பிக்க பாடுபட்ட பொறுப்பதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர்களை பாராட்டியதுடன் உதவியினை வழங்கி திருக்கோவில் பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் குற்றங்களை கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை வழங்குவதைவிட எதிர்காலத்தில் அவ்வாறு குற்றம் புரியாமல் எவ்வாறு சிறப்பான சேவையை வழங்கலாம் என ஆலோசனை வழங்கி அவர்களையும் அரவணைத்து செல்வதே குறித்த பிரிவின் முதற்பணி எனவும் கூறினார்.

# நுவரெலியா கல்வி வலய அதிபர் ஆசிரியர்கள் போராட்டம்

(க.கிஷாந்தன்)

சம்பள முரண்பாடு, நிலுகைக் கொடுப்பனவுகள் உட்பட மேலும் சில பிரச்சினைகளுக்கு தீர்வைகோரி அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்களால் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாளிலேயே, அத்தினத்தை கருப்பு நாளாக அறிவித்து, தமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க போரோட்டத்தில் இறங்கினர்.

அந்தவகையில், நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர், ஆசிரியர்கள் நுவரெலியா நகரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

நுவரெலியா தபால் நிலையத்திற்கு பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.



# மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் இம் மாதம் 15ம் திகதி NVQ 3,4 மட்ட 6 மாத கால புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக. மேற்படி தொழில் நுட்பக்கல்லூரி நிருவாகம் தெரிவித்துள்ளது.

இக்கற்கை நெறிகளுக்கு க. பொ. த சாதாரணதரம் கற்று சித்தியடையாத மாணவர்களும், க. பொ. த உயர்தரம் கற்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். விவசாய கள உதவியாளர், நீர்க்குளாய் பொருத்துனர், அலுமினிய வடிவமைப்பு, மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப் படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 4000 ரூபா நிபுணதா சிசு சவிய புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கப்படவுள்ளதோடு, மானிய அடிப்படையிலான போக்குவரத்து சீசன் டிக்கட் வசதி, சுயதொழில் தொடங்குவதற்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதுடன், இக்கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்கள் தொடர்ச்சியாக மீங்கி மட்டம் 5 கற்கை நெறிகளை கற்க முடியும். விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்ப கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவத்திகதி 11.10.2021 ஆகும் என மேலும் தொழில் நுட்பக் கல்லூரி நிருவாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலையில் ஆர்பாட்டம்

(பொன்ஆனந்தம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை கல்வி திணைக்களங்கள் முன்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர். இன்று காலை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் முன்பாகவும் திருகோணமலை மலை வலயக்கல்வி அலுவலகத்தின் முன்பாகவும் இவ்வார்பாட்டம் நடைபெற்றது.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஆர்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

முதல் நிகழ்வு சுமார் 10.00மணியளவில் கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் முன்பாக நடைபெற்றது. அதன்பின்னர் சுமார் 11.45மணியளவில் வலயக்கல்வித்திணைக்களம் முன்பாக நடைபெற்றது.